7 - ஜூலை 2009
சென்னை-600 005
எழுதுக



சுருக்கம்

நிலவரி – நிலவரி வசூல் செய்யும் முறையை எளிமைப்படுத்துதல் – நிலவரியை திருத்தி அமைத்தும் நிலவரிச் சீர்திருத்தக் குழு அமைத்தும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய் (வ.நி.1(1) துறை

அரசாணை (நிலை) எண்.223 நாள்.7.7.2009.

படிக்க:

முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். வ.நி.6(1)/15583/2009 நாள்.18.6.2009.

ஆணை:

2009–2010– ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 17.2.2009 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"நீண்டகாலமாக நடைமுறையில் இருந்துவரும் தற்போதைய நிலவரி வசூல் முறையில், நிலவரியோடு சேர்த்து தலவரி, தலமேல்வரி, தண்ணீர் தீர்வை போன்றவையும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்த வரிகள் அனைத்தும் சேர்த்து விவசாயிகளுக்கு நில உடைமைக்குச் சான்றாக விளங்கத்தக்க வகையில் ' நிலவரி ' என்ற பெயரால் இனி பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும். சிக்கலான தற்போதைய முறையை எளிமைப்படுத்தி, வரும் பசலி ஆண்டிலிருந்து, புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் 15 ரூபாய் தொகையை, இனி ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டு வரும் ரூபாய் 50 என்பதை இனி ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்கப்படும். தலவரி, தலமேல்வரி, என்று இனி எந்த வரியும் விவசாயிகளின் தலையில் சுமத்தப்பட்டமாட்டாது இதனால் 50 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்."

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்போதுள்ள சிக்கலான நிலவரி விதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகியவற்றை எளிமைப்படுத்தவும், தற்போது நடைமுறையில் உள்ள ஆண்டு ஜமாபந்தி முறையினைத் திருத்தியமைக்கவும், தேவையற்ற கிராமப் பதிவேடுகள் பராமரித்தலைக் கைவிடவும், பிற நோக்கங்களுக்காகவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராக் கொண்ட கீழ்க்கண்ட நிலவரிச் சீர்திருத்த அலுவலர் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிடுகிறது. அக்குழு கூடும்போது தஞ்சாவூர், சிவகங்கை, ஈரோடு, திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து நிலவரி (தண்ணீர்த் தீர்வை, மேம்பாட்டு வரி மற்றும் இனாம் ஒழிப்புச் சட்டம் போன்ற) தொடர்பாக கற்றுணர்ந்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களையும், மாவட்ட வருவாய் அலுவலர்களையும் விவரம் தெரிவிக்க வேண்டி அழைத்துக் கொள்ளலாம்:–

1) முதன்மைச் செயலாளர் மற்றும்
வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை–9 – தலைவர்

2) நில நிர்வாக ஆணையர், – உறுப்பினர்
சென்னை–5.

3) சென்னை நிலவரித்திட்ட அலுவலர்
நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்
துறை, சென்னை–5 – உறுப்பினர்

4) இணை ஆணையர்,
(நிவாரணம் (ம) மறுவாழ்வு)
வருவாய் நிர்வாகத் துறை,
சென்னை–5. – உறுப்பினர் செயலாளர்

3. மேலே பத்தி 2 இல் அமைக்கப்பட்டுள்ள குழு, கீழ்க்கண்ட வரையறைக் குறிப்புகள் (Terms of References) மீதும் இதர தொடர்புடைய இனங்கள் மீதும் ஆராய்ந்து அதன் அறிக்கையை விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்:–

(1) தற்போதுள்ள நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துதல்– இதில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் தலவரி, தலமேல்வரி, தண்ணீர்தீர்வை, மேம்பாட்டுவரி மற்றும் நிலவரி ஆகியவை அடங்கும்.
(2) தற்போதுள்ள ஆண்டு ஜமாபந்தி முறையை திருத்தியமைத்தல்.
(3) கிராமக் கணக்குகளில் உள்ள பல்வேறு நடைமுறைகளைக் குறைத்தல்.
(4) புதிய வரிவசூல் முறையை நடைமுறைப்படுத்த ஏதுவாக உரிய சட்டங்களைத் திருத்துதல்.

4. மேலே பத்தி 2ல் கண்டுள்ள குழுவின் பரிந்துரைகள் மீது உரிய சட்டங்களுக்குத் திருத்தங்கள் மேற்கொள்வதை எதிர்நோக்கி 2009–2010 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க 1419–ம் பசலி ஆண்டு முதல் (2009–2010) நில வரியுடன் இணைத்து வசூலிக்கப்படும் தலவரி, தலமேல்வரி உட்பட ஏனைய வரிகள் நீக்கப்பட்டு நிலவரி மட்டும் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு ரூபாயும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ஐந்து ரூபாயும் வசூல் செய்யப்படும் என அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.1656/FS/P/2009 நாள்.26.6.2006– இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
நில நிர்வாக ஆணையர், சென்னை–5
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், சென்னை–5

Verified Records TM

37-3

நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்
மாநில கணக்காயர் சென்னை18/35.
நகல்
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/7/09
பிரிவு அலுவலர்

7.7.09

Verified RealEstate ™